**இலங்கை துறைமுக அதிகாரசபை**
**பதவி வெற்றிடங்கள்**

கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வேண்டப்படும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி: உதவி கடலக மற்றும் சேறுவாரிக் கல அதிபர் (கனிஷ்ட முகாமைத்துவ மட்டம்) – JLM**
**(POST OF ASSISTANT NAVIGATION & DREDGING MASTER)**

**(அ) தகுதித்திறன்**
கரையோர கடற் பயணங்களில் ஈடுபடும் மொத்த நிறை 500 தொன்னுக்குக் குறைந்த கப்பல்களில் கல அதிபரொருவராக சேவையிலீடுபடுவதற்கு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

**அல்லது**

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட வேறு உயர் மட்டத்திலான தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

**அனுபவம்**
கடலக அதிகாரியொருவராக (Navigational Watch Keeping Officer) இரண்டு (02) வருட கடற் பயண அனுபவம் பெற்றிருத்தல்.

**(ஆ) சம்பளம்**

| | | |
|---|---|---|
| சம்பள வகையீடு | : | 5 : 0 (JLM ) |
| ஆரம்பச் சம்பளம் | : | ரூ. 75,065/= |
| வருடாந்த சம்பள ஏற்றம் | : | ரூ. 1440/= |

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக ரூ. 170,000 அளவினதாக இருக்கும்.

**02. பதவி : உப இழுவைக்கல அதிபர் (கனிஷ்ட முகாமைத்துவ மட்டம்) - JLM**
**(POST OF MATE OF TUGS)**

**(அ) தகுதித்திறன்**
கரையோர கடற் பயணங்களில் ஈடுபடும் மொத்த நிறை 500 தொன்னுக்குக் குறைந்த கப்பல்களில் கல அதிபரொருவராக சேவையிலீடுபடுவதற்கு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது பொது நலவாய நாடுகளின் அரசாங்கமொன்றின் கடல் சார் நிருவாகமொன்றினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்று.

**அல்லது**

இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பொது நலவாய நாடுகளின் அரசாங்கமொன்றின் கடல் சார் நிருவாகமொன்றினால் வழங்கப்பட்ட வேறு எந்தவொரு உயர் மட்டத்திலான தேர்ச்சிச் சான்றிதழ்.

**அத்துடன்**

**அனுபவம்**

கடலக அதிகாரியொருவராக (Navigational Watch Keeping Officer) இரண்டு (02) வருட கடற் பயண அனுபவம் பெற்றிருத்தல்.

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : 5 : 0 (JLM)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 75,065/=
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1440/=

கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக ரூ. 170,000 அளவினதாக இருக்கும்.

**வயதெல்லை**

45 வயதிற்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச துறை அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல.)

இலங்கைத் துறைமுக அதிகாரசபையினால் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அல்லது அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் **பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்), மனிதவளப் பகுதி, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13"** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக 2026.07.14 ஆம் திகதிக்கு முன்னர் **பதிவுத் தபாலில்** அனுப்பப்படுதல் வேண்டும். **விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.**

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்களை அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**